**கவனிக்க** .- *28.02.2014 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1853 - 2014 මාර්තු මස 07 වැනි සිකුරාදා - 2014.03.07

*1853 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 278 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 282 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 279 | ஏல விற்பனைகள் | 288 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க** .- *இவ்வர்த்தமானியின் பகுதி VI இல் 2014 ஆம் ஆண்டிற்கான நுவரெலியா யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுகின்றது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்***, *அதாவது 2014, மார்ச்சு மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, மார்ச்சு மாதம் 14 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

***பீ. எச். எல். வீ. டீ சில்வா,***
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

**காணி, காணி அபிவிருத்தி அமைச்சு**

*இலங்கை நிலஅளவைத் திணைக்களம்*

**பிரதேச நிலஅளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்கு பெற்றுக்கொள்ளல் - 2014**

*கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச நில அளவை அலுவலகங்களிற்கு கட்டிடங்களை இரண்டு வருட காலத்திற்கு வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகங்களின் அலுவலகங்களில் மனுக்கோரல்கள் 2014.03.26 அன்று பிற்பகல் 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் விலைமனுகோரல்கள் பி. ப. 2.05 மணிக்கு திறக்கப்படும். மனுக்கோரல் விண்ணப்பப் படிவங்களையும், குறித்த விபரங்களையும் உரிய மாகாண நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகத்திலும் மற்றும் மாவட்ட நில அளவை அலுவலகத்திலும் மீளப்பெற முடியாத கொடுப்பனவாக ரூபா 250 செலுத்தி 2014.03.25 அன்று பி. ப. 12.00 மணி வரை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*

| மாகாணம் | மாவட்டம் | பிரதேச நில அளவை அலுவலகம் | விண்ணப்பப்படிவங்களும் ஏனைய விபரங்களும் கிடைக்கும் நிலையங்கள் | கேள்வி மனு ஒப்படைத்தல் | அருகில் உள்ள நகரம் | தேவைப்படும் திகதி |
|---|---|---|---|---|---|---|
| மத்திய மாகாணம் | நுவரெலிய | கொத்மலை | மாகாண நில அளவை யாளர் நாயகம் அலுவலகம் (மத்திய மாகாணம்), மாவட்ட நில அளவை அலுவலகம் (நுவரெலிய) | மாகாண நில அளவையாளர் நாயகம் (மத்திய மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயக அலுவலகம், கண்ணொருவ, பேராதெனிய | கொத்மலை அல்லது சுற்றுப் புறத்தில் | 2014, ஏப்பிறல் 01 |
| மேல் மாகாணம் | கொழும்பு | ஹோமாகம (பிம்சவிய) | மாகாண நில அளவை யாளர் நாயகம் அலுவலகம் (மேல் மாகாணம்), மாவட்ட நில அளவை அலுவலகம் (கொழும்பு) | மாகாண நில அளவையாளர் நாயகம் (மேல் மாகாணம்), நில அளவை யாளர் நாயக அலுவலகம், கிருல வீதி, கொழும்பு - 05. | ஹோமா கமை அல்லது சுற்றுப் புறத்தில் | 2014, ஏப்பிறல் 01 |

*ஒட்டப்பட்ட தபாலுறையில் தேவையான சகல விபரங்களுடனான மனுக்கோரல்கள் அது அடங்கிய தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "பிரதேச நிலஅளவை அலுவலகங்களை வாடகைக்கு பெறுதல்" - (இடத்தின் பெயர்) எனக் குறிப்பிட்டு 2014.03.26 அன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படவோ அல்லது நேரடியாக கையளிக்கப்படவோ வேண்டும்.*

*நில அளவையாளர் நாயகம்.*

*நில அளவையாளர்நாயகம் அலுவலகம்,*
*கிருல வீதி,*
*கொழும்பு 05.*

*3-142*

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

**நீதிவான் நீதிமன்றம் - மட்டக்களப்பு**

*சான்றுப்பொருட்கள் ஏல விற்பனை*

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட உரிமை கோரப்படாத கீழ்க்குறிப்பிடப்படும் பொருட்கள் 2014.03.29 ஆந் திகதி அன்று காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை இந்நீதிமன்ற வளவில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

1. இப்பொருட்களுக்கான உரிமை கோருபவர்கள் எவருமிருந்தால் ஏலவிற்பனை தொடங்குவதற்கு முன்னர் தங்களது உரிமைக் கோரிக்கைகளை முன்வைத்தல் வேண்டும்.

2. பொது மக்கள் எவரும் இந்நீதிமன்ற பதிவாளரின் அனுமதியுடன் குறிப்பிட்ட பொருட்களை ஏல விற்பனை தொடங்குவதற்கு அரை மணித்தியாலயத்திற்கு முன்னர் பார்வையிடலாம்.

3. இப்பொருட்களில் எவற்றையேனும் விலைகள் ஒவ்வாத பட்சத்தில் விற்பனையிலிருந்து மீள பெறுவதற்கு இந்நீதிமன்றத்திற்கு உரிமை உண்டு.

4. பொருட்களை கொள்வனவு செய்பவர்கள் உடனடியாக பணத்தைச் செலுத்தி உரிய பொருட்களை நீதிமன்ற வளவிலிருந்து அப்புறப்படுத்தல் வேண்டும். சகல கொடுப்பனவுகளும் பணமாக செலுத்துதல் வேண்டும் காசோலை ஏற்றுக்கொளப்படமாட்டாது.

5. பொருட்களை ஏலத்தில் கோருபவர்கள் தேசிய அடையாள அட்டையைக் கொண்டுவருதல் வேண்டுமென அறியத்தரப்படுகின்றது.

என். எம். எம். அப்துல்லா,
நீதிவான்,
நீதிவான் நீதிமன்றம்.

நீதிவான் நீதிமன்றம்,
மட்டக்களப்பு.

**நீதிவான் நீதிமன்றம் - மட்டக்களப்பு**

*சான்றுப்பொருட்கள் ஏல விற்பனை*

| தொடர் இலக்கம் | வழக்கு இலக்கம் | பொருட்களின் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | AR /639/11 | பச்சை நிற ஜமகா இன மோட்டார் சைக்கிள் | 01 |
| 2 | AR /639/11 | ஹீரோ கொண்டா இனம் கொண்ட மோட்டார் சைக்கிள் | 01 |
| 3 | AR /639/11 | பச்சை நிற ஜமகா இன மோட்டார் சைக்கிள் | 01 |
| 4 | AR /639/11 | மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் சில | 01 |
| 5 | AR /2383/10 | ஹீரோ கொண்டா இனம் கொண்ட கறுப்பு நிற மோட்டார் சைக்கிள் | 01 |
| 6 | AR /392/11 | TVS இன மோட்டார் சைக்கிள் | 01 |
| 7 | AR /393/11 | TVS இன மோட்டார் சைக்கிள் | 01 |
| 8 | 78619/MT/08 | ஹீரோ கொண்டா இனம் கொண்ட நீல நிற மோட்டார் சைக்கிள் | 01 |
| 9 | AR/447/10 | Toyota இன வேன் வண்டி | 01 |
| 10 | HCB/2609/09 HCB/2641/09 | சலி இன மோட்டார் சைக்கிள் | 01 |
| 11 | B/390/04 | பஜாஜ் இன முச்சக்கர வண்டி | 01 |
| 12 | AR/345/12 | 01. இல. 69274582 இலக்கம் கொண்ட துவிச்சக்கர வண்டி | 01 |
| | | 02. இல. 69563568 இலக்கம் கொண்ட துவிச்சக்கர வண்டி | 01 |
| | | 03. இல. 57198354 இலக்கம் கொண்ட துவிச்சக்கர வண்டி | 01 |
| | | 04. துவிச்சக்கர வண்டி M | 01 |
| | | 05. இல. 69296576 இலக்கம் கொண்ட துவிச்சக்கர வண்டி | 01 |
| | | 06. இல. 55969773 இலக்கம் கொண்ட துவிச்சக்கர வண்டி | 01 |
| | | 07. இல. 4327861 இலக்கம் கொண்ட துவிச்சக்கர வண்டி | 01 |
| 13 | AR/498/12 | 01. இல. 692552 இலக்கம் உடைய லுமாலா இன துவிச்சக்கர வண்டி | 01 |
| | | 02. நிக்கல் கலர் துவிச்சக்கர வண்டி | 01 |
| 14 | AR/1260/12 | LU 04084 இலக்கம் உடைய துவிச்சக்கர வண்டி | 01 |
| 15 | AR/1261/12 | இல. 378112 இலக்கம் உடைய துவிச்சக்கர வண்டி | 01 |
| 16 | AR/723/12 | இல. 56698687 இலக்கம் உடைய துவிச்சக்கர வண்டி | 01 |

| தொடர் இலக்கம் | வழக்கு இலக்கம் | பொருட்களின் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 17 | AR/1130/13 | 1. இல. 698227382 இலக்கம் கொண்ட துவிச்சக்கர வண்டி | 01 |
| | | 2. இல. 693227924 இலக்கம் கொண்ட துவிச்சக்கர வண்டி | 01 |
| | | 3. இல. 69292045 இலக்கம் கொண்ட துவிச்சக்கர வண்டி | 01 |
| | | 4. LU 11924 இலக்கம் கொண்ட துவிச்சக்கர வண்டி | 01 |
| | | 5. இலக்கம் இல்லாத லுமாலா இன துவிச்சக்கர வண்டி பிரேம் | 01 |
| | | 6. இலக்கம் இல்லாத துவிச்சக்கர வண்டி பிரேம் | 01 |
| | | 7. CINHEK இன கறுப்பு நிற கிரைண்டர் | 01 |
| | | 8. துவிச்சக்கர வண்டி லீபோக் | 01 |
| | | 9. நொக்கியா இன கறுப்பு நிற இமி இல. : B5866/01/12/126231/7 கொண்ட கையடக்கத் தொலைபேசி | 01 |
| | | 10. நொக்கியா கறுப்பு நிற சீரியல் இலக்கம் .: 354/338/04/630942/09 கொண்ட கையடக்கத் தொலைபேசி | 01 |
| | | 11. இல. 69293683 இலக்கம் கொண்ட துவிச்சக்கர வண்டி | 01 |
| | | 12. இல. 69307956 இலக்கம் கொண்ட துவிச்சக்கர வண்டி | 01 |
| 18 | AR/1080/13 | இல. 98902688 இலக்கம் கொண்ட துவிச்சக்கர வண்டி | 01 |
| 19 | AR/1223/13 | இல. 6306041087 இலக்கம் உடைய துவிச்சக்கர வண்டி | 01 |
| 20 | AR/811/13 | 13 அடி 2 அங்குலம் நீளம் உடைய கொங்கிறீற் இரும்பு துண்டுகள் | 59 |
| 21 | AR/738/13 | இல. 69565397 கொண்ட துவிச்சக்கரவண்டி | 01 |
| 22 | 3534/F/12 | கறுப்பு நிற துவிச்சக்கரவண்டி | 01 |
| 23 | AR/1020/12 | 1. இல. 55990730 இலக்கம் கொண்ட துவிச்சக்கர வண்டி | 01 |
| | | 2. இல. 69293184 இலக்கம் கொண்ட துவிச்சக்கர வண்டி | 01 |
| | | 3. இல. 69518583 இலக்கம் கொண்ட துவிச்சக்கர வண்டி | 01 |
| 24 | 5086/F/12 | 1. இலக்கம் தெளிவில்லாத துவிச்சக்கர வண்டி | 01 |
| 25 | B/542/13 | இலக்கம் தெளிவற்ற லுமாலா இன துவிச்சக்கர வண்டி | 01 |
| 26 | 2897/F/12 | இல. 88243768 கொண்ட லுமாலா இன துவிச்சக்கர வண்டி | 01 |
| 27 | 2896/F/12 | இல. 57069625 கொண்ட லுமாலா இன துவிச்சக்கர வண்டி | 01 |
| 28 | AR/440/13 | இல. 57161436 கொண்ட லுமாலா இன துவிச்சக்கர வண்டி | 01 |
| 29 | AR/441/13 | இல. 9412 கொண்ட மௌன்டன் இன துவிச்சக்கர வண்டி | 01 |
| 30 | AR/565/13 | 1. இல. YN 27 உடைறொக்றில் | 01 |
| | | 2. றொக்றில் இருந்த கறுப்பு நிற கவர் | 01 |
| | | 3. றொக்றில் பொருத்தப் பயன்படும் இரும்பு கூர் | 02 |
| | | 4. இரும்பு வாளி | 01 |
| | | 5. மண்வெட்டி | 01 |
| 31 | 6800/MISC/12 | 1. சவள் | 02 |
| | | 2. டென்ட் | 01 |
| 32 | 3788/MISC/12 | 1. மண்வெட்டி | 02 |
| | | 2. அலவாங்கு | 02 |
| | | 3. இரும்பு வாளி | 01 |
| | | 4. சவள் | 01 |
| | | 5. பிளாஸ்ரிக் வாளி | 02 |
| | | 6. குத்து விளக்கு | 01 |
| | | 7. டோச்லைட் | 01 |
| | | 8. சங்கிலி | 01 |
| 33 | 5545/MISC/12 | 1. சவள் | 01 |
| | | 2. டெண்ட் | 01 |
| 34 | 4698/MISC/12 | 1. சவள் | 01 |
| | | 2. டெண்ட் | 01 |
| 35 | 9080/MISC/10 | சவள் | 01 |
| 36 | 6054/PC/12 (B/197/12) | கத்தி | 01 |
| 37 | 3941/F/12 | கோடரி | 01 |

| தொடர் இலக்கம் | வழக்கு இலக்கம் | பொருட்களின் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 38 | 3942/F/12 | கோடரி | 01 |
| 39 | 3943/F/12 | கோடரி | 01 |
| 40 | 2697/MISC/11 | சவள் | 03 |
| 41 | 10532/MISC/13 | சவள் | 01 |
| 42 | 10534/MISC/13 | சவள் | 01 |
| 43 | 10533/MISC/13 | சவள் | 02 |
| 44 | 10608/MISC/10 | சவள் | 01 |
| 45 | 10536/MISC/13 | சவள் | 04 |
| 46 | 10585/MISC | 01. சவள் | 04 |
| | | 02. மண்வெட்டி | 04 |
| 47 | 11253/F/13 | 01. கோடரி | 01 |
| | (686/13) | 02. வொச் | 01 |
| 48 | AR/308/13 | 01. 30 L ஒயில் அடங்கிய கலன் | 01 |
| | | 02. 20 L ஒயில் அடங்கிய கலன் | 01 |
| | | 03. வெற்று பரல் | 01 |
| 49 | AR/732/11 | கையடக்கத் தொலைபேசி | 01 |
| 50 | AR/1027/12 | 01. பவர் அம்பியர் | 01 |
| | | 02. பன்னியர் இன பவர் செசட் 01 | 01 |
| | | 03. கார் செட் | 01 |
| 51 | AR/487/13 | 01. நொக்கியா E89 இனம் கொண்ட கையடக்கத் தொலைபேசி | 01 |
| | | 02. கையடக்கத் தொலைபேசி | 01 |
| | | 03. IPRO இனம் கொண்ட கையடக்கத் தொலைபேசி | 01 |
| | | 04. பிளக்வெரி இனம் கொண்ட கையடக்கத் தொலைபேசி | 01 |
| 52 | AR/812/13 | இல. 56040842 இலக்கம் கொண்ட துவிச்சக்கர வண்டி | 01 |
| 53 | AR/677/13 | SA 405017 இலக்கம் கொண்ட துவிச்சக்கர வண்டி | 01 |
| 54 | 3864/F/12 | கோடரி | 01 |
| 55 | 3865/F/12 | கத்தி | 01 |
| 56 | 3867/F/12 | கத்தி | 01 |
| 57 | 3868/F/12 | கத்தி | 01 |
| 58 | AR/42/13 | சிறிய கொங்கிறீட் கம்பித்துண்டுகள் | 20 |
| 59 | AR/753/13 | இல. 55923590 இலக்கம் கொண்ட துவிச்சக்கர வண்டி | 01 |
| 60 | AR/739/13 | இல. 69778305 இலக்கம் கொண்ட துவிச்சக்கர வண்டி | 01 |
| 61 | AR/740/13 | இல. 57169219 இலக்கம் கொண்ட துவிச்சக்கர வண்டி | 01 |
| 62 | 5260/F/12 | இல. 55975973 இலக்கம் கொண்ட துவிச்சக்கர வண்டி | 01 |
| 63 | AR/806/12 | இல. 69569761 இலக்கம் கொண்ட துவிச்சக்கர வண்டி | 01 |
| 64 | AR/1013/13 | 1. இல. 6928722 இலக்கம் உடைய துவிச்சக்கர வண்டி | 01 |
| | | 2. இல. STJL 185383 இலக்கம் உடைய துவிச்சக்கர வண்டி | 01 |
| | | 3. இலக்கம் தெளிவில்லாத துவிச்சக்கர வண்டி | 01 |
| | | 4. இல. FEX 64050014 இலக்கம் உடைய துவிச்சக்கர வண்டி | 01 |
| | | 5. இல. GK 43197 இலக்கம் உடைய துவிச்சக்கர வண்டி | 01 |
| | | 6. இல. 69257937 இலக்கம் உடைய துவிச்சக்கர வண்டி | 01 |
| | | 7. இல. 69287755 இலக்கம் உடைய துவிச்சக்கர வண்டி | 01 |
| | | 8. இல. 193768 இலக்கம் உடைய துவிச்சக்கர வண்டி | 01 |
| 65 | 10958/F/12 | கோடரி | 01 |
| 66 | AR/737/13 | இல. 561042274 இலக்கம் கொண்ட துவிச்சக்கர வண்டி | 01 |
| 67 | AR/735/13 | இல. 69296370 இலக்கம் கொண்ட துவிச்சக்கர வண்டி | 01 |
| 68 | AR/307/13 | இல. 6962 இலக்கம் கொண்ட துவிச்சக்கர வண்டி | 01 |
| 69 | AR/306/13 | இலக்கம் தெளிவற்ற துவிச்சக்கர வண்டி | 01 |
| 70 | AR/16/2014 | 15 அடி நீளமான தோணி | 01 |

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

### பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் கீழ், கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.*

*கம்பனியின் பெயர்* : சொலுஷன் எசோஷியேட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 67324
*கூட்டிணைப்புத் திகதி* : 2009.03.18
*பதிவு முகவரி* : இல. 1067/4, பொத்துவாராவ வீதி, மாலபே

கம்பனி செயலாளர்.

3-01

### அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் கீழ், கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.*

*கம்பனியின் பெயர்* : பியுடெக்ஸ் ஒடோ பார்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 96870
*கூட்டிணைப்புத் திகதி* : 2014.02.05
*பதிவு முகவரி* : 06, தம்மிக வேரகொட, பல்லேவெல

கம்பனி பணிப்பாளர்.

3-04

### அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*கம்பனியின் பெயர்* : பர்னொட் ரிகாட் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 96803
*பதிவுத் திகதி* : 2014.01.30
*பதிவு முகவரி* : இல. 47, அலெக்ஸான்ட்ராபிளேஸ், கொழும்பு - 07

கம்பனி செயலாளர்கள்.

கோப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
பிரைவேட் லிமிட்டெட்
3-23

### அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் கீழ், கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.*

*கம்பனியின் பெயர்* : எலிகன்ஸ் பெஷன் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 96490
*கூட்டிணைப்புத் திகதி* : 2014.01.10
*பதிவு முகவரி* : 102/பீ/1, மானமுல்ல மேற்கு, பாணந்துறை

கம்பனி செயலாளர்.

3-62/1

### பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் கீழ், கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.*

*கம்பனியின் பெயர்* : சியோமெக் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 95745
*கூட்டிணைப்புத் திகதி* : 2013.11.26
*பதிவு முகவரி* : 32, திஸ்ஸ மாவத்தை, பொருபன வீதி, இரத்மலானை

கம்பனி செயலாளர்.

3-62/2

### பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் கீழ், கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.*

*கம்பனியின் பெயர்* : றொஷான் டிஸ்ட்ரிபியுடர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 94524
*கூட்டிணைப்புத் திகதி* : 2013.09.12
*பதிவு அலுவலகம்* : புகையிரத வீதி, குடாவச்கடுவை, வச்கடுவை

கம்பனி செயலாளர்.

3-62/3

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனிகள் கூட்டிணைப்பு சம்பந்தமாக பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கீழ் குறிப்பிட்ட கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளன என்பதை அறியத்தருகின்றோம் :

*கம்பனியின் பெயர்* : மென்ஸ் லுக் (தனியார்) கம்பனி
*பதிவிலக்கம்* : பீவீ 94695
*பதிவு செய்த திகதி* : 2013.09.25
*பதிவு செய்த அலுவலகம்* : இல. 44, வதுராமுல்லை வத்தை,
கிரிபேரிய பாதை,
பாணந்துறை.

கே. எஸ். செகிரடரிஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.

3-62/4

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனிகள் கூட்டிணைப்பு சம்பந்தமாக பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கீழ் குறிப்பிட்ட கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளன என்பதை அறியத்தருகின்றோம் :

*கம்பனியின் பெயர்* : வில்ஸ் மென்ஸ் கலெக்ஷன் (தனியார்) கம்பனி
*பதிவிலக்கம்* : பீவீ 94700
*பதிவு செய்த திகதி* : 2013.09.25
*பதிவு செய்த அலுவலகம்* : இல. 388/1ஏ, காலி வீதி,
பாணந்துறை.

கே. எஸ். செகிரடரிஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.

3-62/5

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

*கம்பனியின் பெயர்* : எஸ். ஸீ. கொமோடிற்றீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 96409
*பதிவு செய்யப்பட்ட முகவரி* : 2 ஆம் மாடி, மக்லறன்ஸ் கட்டிடம்,
இல. 123, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 4.

செக்றிடேறியல் ஹவுஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

இல. 10, ஹவ்லொக் பிளேஸ்,
கொழும்பு 05.

3-64

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவிற்கமைவாக.

*கம்பனியின் பெயர்* : பர்னென்டோ கிப்சன் என்ட் கே. ஏ. ஈ. (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 96820
*திகதி* : 2014.01.30
*கம்பனியின் பதிவு முகவரி* : 'எக்ஸஸ் டவர்ஸ்' லெவல் 7,
இல. 278, யூனியன் பிளேஸ்,
கொழும்பு - 02.

பிஸ்னஸ்மேட் (பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

இல. 45, பிரேபுறூக் ஸ்ட்ரீட்,
கொழும்பு - 02,
2014.02.07.

3-66

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவிற்கமைவாக.

*கம்பனியின் பெயர்* : கேமசுத்ர (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 96788
*திகதி* : 2014.02.03
*கம்பனியின் பதிவு முகவரி* : இல. 44, தர்மபால பிளேஸ், ராஜகிரிய.

பிஸ்னஸ்மேட் (பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

இல. 45, பிரேபுறூக் ஸ்ட்ரீட்,
கொழும்பு - 02,
2014.02.05.

3-67

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவிற்கமைவாக.

*கம்பனியின் பெயர்* : டி. டீ. கே. டிரேட் லிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 96857
*திகதி* : 2014.02.03
*கம்பனியின் பதிவு முகவரி* : இல. 49 1/4, புறூக் ரெஸிடன்ஷி,
பிரேபுறூக் ஸ்ட்ரீட்,
கொழும்பு - 02.

பிஸ்னஸ்மேட் (பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

இல. 45, பிரேபுறூக் ஸ்ட்ரீட்,
கொழும்பு - 02,
2014.02.05.

3-68

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

பெலியத்த, நிஹிலுவ, வலாவெல, கீகனஹேனயில் வசிக்கும் கட்டடிகே சோமாவதீ ஆகிய நான், சுவிட்சர்லாந்து, ஜெனீவாவில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கொன்ஸலேட் ஜெனரல், சமாதான நீதவான் தெல்கே ஜோஸப் ரன்ஞன் பீரிஸ் என்பவரால் 11.01.2013 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்டு கட்டடிகே லீலாவதி என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணி தத்துவத்தை இத்துடன் இரத்துச் செய்கிறேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கிறேன். இதன் பின்னர் அவர் மேற்படி அற்றோணித் தத்துவத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளும் எவ்வித கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்புதாரி அல்ல எனவும் குறிப்பிடுகிறேன்.

கட்டடிகே சோமாவதி.

3-69

---

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

மஹரகம, வத்தேகெதர வீதி, எல்ஹேன ஒழுங்கை, இல. 6/4, என்னும் முகவரியைச் சேர்ந்த சுரவீர ஆராச்சிகே டொன் மகேந்திர திலக் குணவர்தன ஆகிய நான், தெஹிவளை, களுபோவில, டீ சில்வா வீதி, இல. 11 என்னும் முகவரியைச் சேர்ந்த சுரவீர ஆராச்சிகே டொன் ஸ்ரீயானி வருசவிதாரண என்பவரை எனது சட்டபூர்வமான அற்றோணித் தத்துவக்காரராக நியமிப்பதற்கு கொழும்பு மேல் நீதிமன்றப் பிரதேசத்தின் பிரசித்த நொத்தாரிசு ஹமில்டன் அமரவிக்கிரமவினால் 2001.11.01 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட, 114 ஆம் இலக்க அற்றோணித் தத்துவ உரிமைப் பத்திரம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்பதையும் மேற்குறிப்பிட்ட சுரவீர ஆராச்சிகே டொன் ஸ்ரீயானி வருசவிதாரண இனிமேல் எனது அற்றோணித் தத்துவக்காரராகச் செயற்பட உரிமையற்றவர் என்பதையும் இலங்கையிலுள்ள சகலருக்கும் இத்தால் அறிவிக்கிறேன்.

எஸ். ஏ. டி. மகேந்திர திலக் குணவர்தன.

3-70

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் 2014, சனவரி மாதம் 21 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட கம்பனிக்கான அறிவித்தல்.

கம்பனியின் பெயர் : கேன்ரிட் கன்சல்டன்ஸ் (பிறைவேட்) லிமிடெட்
கம்பனியின் பதிவிலக்கம் : பீவீ 96514
கம்பனியின் விலாசம் : க்லன்மார்க் பில்டிங், 1ம் மாடி, இல. 100ஏ, திம்புல்ல வீதி, ஹட்டன்

மு. புஸ்பராஜ்,
கம்பனி செயலாளர்.

3-89

---

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டதென்ற அறிவித்தல் இத்தால் வழங்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர் : இரோபியன் கிரீன் எனர்ஜி (பிறைவேட்) லிமிடெட்
கம்பனி இலக்கம் : பீவீ 95804
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2013.12.11
பதிவு முகவரி : 2/18, வல்லாகொட, ஹிக்கடுவ

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

3-94

---

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டதென்ற அறிவித்தல் இத்தால் வழங்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர் : டெரனீ க்லோபல் என்டர்பிரைசஸ் (பிறைவேட்) லிமிடெட்
கம்பனி இலக்கம் : பீவீ 93767
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2013.07.25
பதிவு முகவரி : 30ஈ, றன்கெத இடம், பரோபகார மாவத்தை, பொறலஸ்கமுவ

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

3-95

---

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

மொரட்டுவ, சொய்சாபுரம், இல. பீ 32 இல் வசிக்கும் திலின கிறிஷாந்த வணிகசேகர வன்னி ஆச்சி ஆகிய என்னால் பிரசித்த நொத்தாரிசு வசந்த வீ. ரணசிங்க அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல. 1272 மற்றும் 2004.05.21 ஆந் திகதியிடப்பட்ட அற்றோணித்தத்துவத்தால் மடபாத்த பட்டகெதர தேவால றோட், இல. 266/4 இல் வசிக்கும் பிரபுத்திகா சஜீவனி வணிகசேகர அவர்களுக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவத்தை முற்றாக இரத்துச் செய்ததாக எல்லோருக்கும் இத்தால் அறியத்தருகிறேன்.

திலின சிறிஷாந்த வணிகசேகர வன்னி ஆரச்சி.

3-97

## கிரேன்ட் ஹொடெல் (பிறைவேட்) லிமிடெட்

கிரேன்ட் ஹொடெல் (பிறைவேட்) லிமிடெட் (பீவீ 7846) மற்றும் நுவர எலிய ஹொடெல் கம்பனி பீஎல்சீ (PQ 101) என்பவற்றின் ஒன்றிணைப்பு

இத்தால் அறியத்தரப்படுவது யாதெனில், 2007 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242 (3) (பி) பிரிவின்கீழ் கிரேன்ட் ஹொடெல் (பிறைவேட்) லிமிட்டெட் மற்றும் நுவர எலிய ஹொடெல் கம்பனி பீஎல்சீ ஆகிய கம்பனிகளது பணிப்பாளர் சபையினால் 2014 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 6 ஆந் திகதியன்று அங்கீகரிக்கப்பட்ட தீர்மானத்தின்படி, மேற்கூறிய இரு கம்பனிகளும், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242 ஆம் பிரிவின்படி ஒன்றிணைக்கப்படும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஒன்றிணைக்கப்பட்ட கம்பனி நுவரஎலிய ஹொடெல் கம்பனி பீஎல்சீ என அழைக்கப்படும். ஒன்றிணைப்பு இயங்கத் தொடங்கும் திகதி 2014 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ஆந் திகதி அல்லது கம்பனிகள் பதிவாளர் நாயகத்தினால் ஒன்றிணைப்பு சான்றிதழில் குறிப்பிடப்படும் திகதியாகும்.

கம்பனிகள் சட்டத்தின் 242 (4) ஆம் பிரிவின்படி ஒன்றிணைத்து தாபிக்க கருதும் ஒன்றிணைப்புத் திட்ட அறிக்கையினது பிரதிகள் ஒன்றிணைப்புக்குட்படும் ஏதாவது கம்பனியின் பங்குதாரர் அல்லது கடன் தருநர் அல்லது ஒன்றிணைப்புக்குட்படும் ஏதாவது கம்பனி கடமைப்பட்டுள்ள ஏதாவது நபரின் பரிசீலனைக்காக கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகமாகிய இல. 236, காலி றோட், கொழும்பு 03 இல் சாதாரண அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனி செயலாளர்.
கிரேன்ட் ஹொடெல் (பிறைவேட்)
லிமிட்டெட்.

3-106/1

---

## நுவரஎலிய ஹொடெல் கம்பனி பீஎல்சீ

கிரேன்ட் ஹொடெல் (பிறைவேட்) லிமிடெட் (பீவீ 7846) மற்றும் நுவர எலிய ஹொடெல் கம்பனி பீஎல்சீ (PQ 101) என்பவற்றின் ஒன்றிணைப்பு

இத்தால் அறியத்தரப்படுவது யாதெனில், 2007 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242 (3) (பி) பிரிவின்கீழ் கிரேன்ட் ஹொடெல் (பிறைவேட்) லிமிட்டெட் மற்றும் நுவர எலிய ஹொடெல் கம்பனி பீஎல்சீ ஆகிய கம்பனிகளது பணிப்பாளர் சபையினால் 2014 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 6 ஆந் திகதியன்று அங்கீகரிக்கப்பட்ட தீர்மானத்தின்படி, மேற்கூறிய இரு கம்பனிகளும், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242 ஆம் பிரிவின்படி ஒன்றிணைக்கப்படும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஒன்றிணைக்கப்பட்ட கம்பனி நுவரஎலிய ஹொடெல் கம்பனி பீஎல்சீ என அழைக்கப்படும். ஒன்றிணைப்பு இயங்கத் தொடங்கும் திகதி 2014 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ஆந் திகதி அல்லது கம்பனிகள் பதிவாளர் நாயகத்தினால் ஒன்றிணைப்பு சான்றிதழில் குறிப்பிடப்படும் திகதியாகும்.

கம்பனிகள் சட்டத்தின் 242 (4) ஆம் பிரிவின்படி ஒன்றிணைத்து தாபிக்க கருதும் ஒன்றிணைப்புத் திட்ட அறிக்கையினது பிரதிகள் ஒன்றிணைப்புக்குட்படும் ஏதாவது கம்பனியின் பங்குதாரர் அல்லது கடன் தருநர் அல்லது ஒன்றிணைப்புக்குட்படும் ஏதாவது கம்பனி கடமைப்பட்டுள்ள ஏதாவது நபரின் பரிசீலனைக்காக கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகமாகிய இல. 236, காலி றோட், கொழும்பு 03 இல் சாதாரண அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனி செயலாளர்,
நுவர எலிய ஹொடெல்
கம்பெனி பிஎல்சீ.

3-106/2

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

ஹிக்கடுவை, அமரசேன மாவத்தை, துடுவேகொடவெல, இல. 12 இல் வசிக்கும் அமாருகே சரத் ஆகிய நான் காலி மாவட்ட பிரசித்த நொத்தாரிசு பி. எச். தமீர சம்பத் விஜேரத்ன அவர்களால் வருடம் 2013.08.15 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டு வழங்கப்பட்ட இலக்கம் 29 குறிக்கும் அற்றோணி அதிகாரப் பத்திரத்தின் மூலம் என்னுடைய அற்றோணி அதிகார தத்துவகாரராக உஹன, ஸமனபெத்த, இல. 30 இல் வசிக்கும் தற்போது என்னுடைய மேற்கூறப்பட்ட முகவரியில் வசிக்கும் ஹேவா ஸிலியன்கே கேர்டிலதா என்பவரை பிரதியிடுவதை 2014 ஆவது வருடம் சனவரி மாதம் 13 ஆந் திகதி முதல் சட்டரீதியாக இரத்துச் செய்வதுடன் இல்லாதொழிக்கின்றோம் என்பதை இதன் மூலம் எல்லோரும் அறியும்படி அறிவித்தல் செய்கின்றோம்.

அமாருகே சரத்.

3-126

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு - 03, புகையிரத நிலைய வீதி, இல. 4 இடப்பட்ட இடத்தில் (பதிவு இல. பிவி 7657) இடப்பட்ட முன்னர் ஜெனரல் சேல்ஸ் கம்பனி லிமிட்டெட் என அடையாளப்படுத்தப்பட்ட தற்பொழுது ஜெனரல் சேல்ஸ் கம்பனி பிரைவேட் லிமிட்டெட் என அடையாளப்படுத்தப்பட்ட எங்களால் இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் நுகேகொடை, மெல்ல பிளேஸ், இல. 55 இடப்பட்ட இடத்தில் வசிக்கும் லொகு லியனகே கபில தில்ருக்ஷான் கப்ரால் (தேசிய அடையாள அட்டை இல. 593573796V) என்பவரின் நலத்திற்கு அளிக்கப்பட்ட, கொழும்பு பகிரங்க நொத்தாரிசு வன்னிநாயக்க முதியன்சேலாகே சந்திமா டிக்கிரி குமாரி வன்னிநாயக்க அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட இல. : 08 மற்றும் 2008, செத்தெம்பர் மாதம் 8 ஆந் திகதியிடப்பட்ட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்து அதிகாரமற்றதாகச் செய்துள்ளதால், லொகு லியனகே கபில தில்ருக்ஷான் கப்ரால் என்பவர் முன்னர் ஜெனரல் சேல்ஸ் கம்பனி லிமிட்டெட் என அடையாளப்படுத்தப்பட்ட, தற்பொழுது ஜெனரல் சேல்ஸ் கம்பனி பிறைவேட் லிமிட்டெட் நிறுவனத்தினால் தொடர்ந்து சேவை செய்யப்படாமலும், மேலும் முன்னர் ஜெனரல் சேல்ஸ் கம்பனி பிறைவேட் லிமிட்டெட் மற்றும் ஜெனரல் சேல்ஸ் கம்பனி பிறைவேட் லிமிட்டெட் ஆகிய எங்களால் அதன் லொகு லியனகே கபில தில்ருக்ஷான் கப்ரால் என்பவரால் செய்யப்பட்ட ஏதாவது செயற்பாடுகள் அல்லது செய்வதற்கு எண்ணியுள்ள ஏதாவது செயற்பாடுகள் சம்பந்தமாக சட்டரீதியாக

பொறுப்புகளுக்கு கட்டுப்படமாட்டாது எனவும், முன்னர் ஜெனரல் சேல்ஸ் கம்பனி பிறைவேட் லிமிட்டெட் மற்றும் தற்பொழுது ஜெனரல் சேல்ஸ் கம்பனி பிரைவேட் லிமிட்டெட் நிறுவனத்தினால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொதுமக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கிறோம்.

3-132

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு - 05, சித்தார்த்த வழி, 8/16 என்ற இலக்கத்தைச் சேர்ந்தவரும் 810191821X என்ற இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையை உடையவருமான அத்தப்பன் கோபிராஜ் ஆகிய நான, பிரசித்த நொத்தாரிஸ் எஸ். கங்காதரன் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 11916 என்ற இலக்கத்தையும் 2012, திசெம்பர் 21 ஆந் திகதியையுடையதும், கொழும்பு 06, வெள்ளவத்தை, தர்மாராம வீதி, 44/7 ஆம் இலக்கத்தைச் சார்ந்த பெருமாள் பழனியப்பன் என்பவருக்கு வழங்கப்பட்ட அனைத்து தத்துவங்களையும் இத்தால் இல்லாதொழித்து இரத்துச் செய்கின்றேன்.

ஏ. கோபிராஜ்.

3-136

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இத்தால் இலங்கை சோசலிச சனநாயகக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருவதாவது 6157 ஆம் இலக்க 2012.01.04 ஆந் திகதியும் கொண்ட மாத்தறைப் பிரசித்திபெற்ற நொத்தாரிசு பணங்களகே ஆறியசேன அவர்களினால் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தின் மெத்தவத்த இல. 1 இல் வசிக்கும் நன்தாவதீ அல்விஸ் (அடையாள அட்டை இல. 346863072V) என்பவருக்கு தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்தில், மெத்தவத்த இல. 01 இல் வசிக்கும் லொகுவடுகே சுமித்தேசப்பிரிய அல்விஸ் ஆகிய நான் வழங்கிய அற்றோணிப் பத்திரத்தை 2013.06.07 ஆந் திகதியிலிருந்து இரத்துச் செய்கிறேன். இத்தினத்தின் பின் அற்றோணி அதிகாரம் பெற்றவரால் மேல் குறிப்பிட்ட அற்றோணிப் பத்திரத்தின் பிரகாரம் மேற்கொள்ளும் எதுவித நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்பேற்பதில்லை.

லொகுவடுகே சுமித் தேசப்பிரிய அல்விஸ்.

3-137

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் 2011, சனவரி 24 ஆந் திகதி பிடுமிக்ஸ் இன்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டெட் கூட்டிணைக்கப்பட்டது என அறியத்தருகின்றோம்.

கம்பனியின் பெயர் : பிடுமிக்ஸ் இன்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 76698
பதிவு அலுவலகம் : 23/40, தியவன்னா கார்டின்ஸ், பாகொட வீதி, நுகேகொடை.

ஏ. எல். எஸ். என். சிறிவர்தன,
செயலாளர்,
பிட்டுமிக்ஸ் இஞ்சினியரிங்
(பிறைவேட்) லிமிட்டெட்.

3-147

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் 2007, மே 17 ஆந் திகதி எபீரன் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் கூட்டிணைக்கப்பட்டது என அறியத்தருகின்றோம்.

கம்பனியின் பெயர் : எபீரன் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட
கம்பனி இலக்கம் : பீவீ 60014
பதிவு அலுவலகம் : 23/40, தியவன்னா கார்டின்ஸ், பாகொட வீதி, நுகேகொடை.

ஏ. எல். எஸ். என். சிறிவர்தன,
செயலாளர்,
லங்கா ரோட்கெம்
(பிறைவேட்) லிமிட்டெட்.

3-148

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் கீழ், கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது.

கம்பனியின் பெயர் : ஹிரான் பவர் அலுகும்புகயாய (பிறைவேட்) லிமிட்டெட
கம்பனி பதிவிலக்கம் : பீவீ 95974
கூட்டிணைக்கப்புத் திகதி : 2013.12.10
பதிவு முகவரி : மாபிம, ஹெய்யந்துடுவ

செயலாளர்கள்.
கோப்பரேட் மெனேஜ்மன்ட் கன்சல்டன்ஸ்
என்ட் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.

3-149

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் கீழ், கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது.*

*கம்பனியின் பெயர்* : ஹிரான் பவர் மினிபே (பிறைவேட்) லிமிட்டெட
*கம்பனி பதிவிலக்கம்* : பீவீ 95980
*கூட்டிணைக்கப்புத் திகதி* : 2013.12.10
*பதிவு முகவரி* : மாபிம, ஹெய்யந்துடுவ

செயலாளர்கள்.
கோப்பரேட் மெனேஜ்மன்ட் கன்சல்டன்ஸ்
என்ட் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.

*3-150*

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் 2013, சனவரி 15 ஆந் திகதி லங்கா ரோட்கெம் (பிறைவேட்) லிமிட்டெட் கூட்டிணைக்கப்பட்டது என அறியத்தருகின்றோம்.

*கம்பனியின் பெயர்* : லங்கா ரோட்கெம் (பிறைவேட்) லிமிட்டெட
*கம்பனி இலக்கம்* : பீவீ 90402
*பதிவு அலுவலகம்* : 23/40, தியவன்னா கார்டின்ஸ், பாகொட வீதி, நுகேகொடை.

எ. எல். எஸ். என். சிறிவர்தன,
செயலாளர்,
லங்கா ரோட்கெம்
(பிறைவேட்) லிமிட்டெட்.

*3-151*

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் கீழ், கீழ்வரும் கம்பனி 2013.12.02 ஆந் திகதி கூட்டிணைக்கப் பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

*கம்பனியின் பெயர்* : ஓட் என்ட் மீனா (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 95843
*பதிவு முகவரி* : இல. 14/B, எஸ். ஆர். நாணயக்கார மாவத்தை, வேவல, ஹிக்கடுவ.

கம்பனிச் செயலாளர்.

*3-152*

## வால்மீகி ஹோல்டிங்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிடெட்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆவது (1) ஆம் பிரிவின் கீழான, கூட்டிணைப்பு தொடர்பான அறிவித்தல்*

வால்மீகி ஹோல்டிங்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் என்ற பெயரில் புதிய கம்பனி ஒன்றை 2014, பெப்புருவரி மாதம் 5 ஆந் திகதி தொடக்கம் கூட்டிணைக்கப்பட்டதுடன் அதன் கம்பனி பதிவு இல. பீவீ 96875 என்றும் அதன் பதிவு அலுவலகம் இல. 28 (2 ஆம் மாடி), டபிள்யு. ஏ. டி. ராமநாயக்க மாவத்தை, கொழும்பு 2 இல் அமைந்துள்ளது என்று இத்தால் பொது மக்களுக்கு அறியத் தருகின்றோம்.

கம்பனி செயலாளர்கள்,
எம். என்ட் ஏ. கம்பனி செக்கரடரீஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்.
இல. 28 (2 ஆம் மாடி), டபிள்யு. ஏ. டி
ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு 02.

*3-176*

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கெசல்வத்த திகால வீதி, 'அபே செவண' இலக்கம் 102 யை வதிவிடமாக கொண்ட, சவுண்திர ஹணதிகே காயத்திரி நிரொஷா டீ சில்வா ஆகிய நான் யாவருக்கும் வெளிப்படுத்துவது யாதெனில், ஹல்பேவத்தகே திலகா இராங்கணி டீ சில்வா அவர்களுக்கு வழங்கப்பட்டதும் 2028, இலக்கத்தைக் கொண்டதும், 2009.04.22 ஆந் திகதியிடப்பட்டதும், பாணந்துறை பிரசித்த நொத்தாரிஸ் மல்லிகா தணுசேகர அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட குறித்த அற்றோணி தத்துவம், இத்தால், இரத்து செய்யப்படும். இல்லாதொழிக்கப்படுகின்றது. மற்றும் எதிர்காலத்தில் எனது அற்றோணி தத்துவம் சம்பந்தமாக குறித்த நபரினால் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்கள் எவற்றிற்கும் நான் பொறுப்பாளியல்ல என்பதை வெளிப்படுத்துகிறேன்.

*3-183*

---

## வ/ப பொறுப்புள்ள தனியார் கம்பனியொன்றின் பெயர் மாற்றம் பற்றிய பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (2) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல். கீழ்வரும் கம்பனியின் பெயர் திகதியிலிருந்து பின்வருமாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

*கம்பனியின் முன்னைய பெயர்* : ரேய்ஸ் ஒப் ஜெம் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவிலக்கம்* : பீவீ 87867

*பதிவு முகவரி* : இல. 38, கோல்பேஸ் கோட் 02, கொழும்பு 03

*கம்பனியின் புதிய பெயர்* : ப்ளூ ஸ்கய் எக்குயுமரைன் (பிறைவேட்) லிமிட்டெட்

சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்கள்.

மெயிடஸ் செக்கடரியல் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
2014, பெப்புருவரி.

3-193

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்படி கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கம்பனி கூட்டிணைக்கப்படுவதற்கான அறிவித்தலாகும்.

*கம்பனியின் பெயர்* : செனோனா இன்டக்ரேடட் (பிறைவேட்) லிமிட்டெட்

*கம்பனி இலக்கம்* : பிவீ 96510

*பதிவு அலுவலக முகவரி* : இல. 966/1, வில்லியம் இடம், பெலவத்தை, பத்தரமுல்லை.

*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 13.01.2014

பணிப்பாளர்கள்.

3-209

# ஏல விற்பனைகள்

**தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விற்பனை

**பகிரங்க ஏல விற்பனை**

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம், காத்தான்குடி நகர சபைக்கு உட்பட்டதும் காத்தான்குடி பிரதேச செயலகப் பிரிவில் 8 ஆம் இலக்க வாட் புதிய காத்தான்குடி கிராமத்தில் கர்பலா வீதியில் வரிமதிப்பீட்டு இல. 30 மற்றும் 34/25 இல் அமைந்துள்ளதும் நில அளவை நாயகத்தால் அளந்து தயாரிக்கப்பட்ட பட இல. பிபி மட/1182 இல் காணித்துண்டு இல. 3 என அடையாளமிடப்பட்ட 06.60 விசாலம் கொண்ட 'புது காத்தான்குடி பூமி' என அழைக்கப்படும் காணியும் அதிலுள்ள ஒற்றை கட்டிடமும் அக்காணியில் அல்லது கட்டிடத்தில் தற்போது இணைந்துள்ள அல்லது இதன்பின் காலத்திற்கு காலம் பொருத்தப்படும் அல்லது நிலையாக அக்காணித்துண்டில் அல்லது அக்காணியிலுள்ள கட்டிடத்தில் பொருத்தப்படும். மின் வழங்கல் முறைமை அதன் சாதனம், நீர் வழங்கல் முறைமை சாதனம் தொலைபேசி சாதனம் வாயுசீராக்கி சாதனம் முதலியனவற்றை உள்ளடக்கிய அசையும் பொறி, இயந்திரம் சாதனம் பொருத்துக்கள் இணைப்புக்கள் சேவைகள்.

முறையே 06.60 பேர்ச்சுகள் விசாலம் கொண்ட வரிமதிப்பீட்டு இல. 30, கர்பலா வீதி, புதிய காத்தான்குடியில் அமைந்துள்ளதும் மற்றும் 07.75 பேர்ச்சஸ் விசாலம் கொண்ட வரிமதிப்பீட்டு இல. 34/25, கர்பலா வீதி, புதிய காத்தான்குடியில் அமைந்துள்ள பெறுமதிமிக்க காணியும் வளாகமும்.

தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சி சார்பில் வழங்கப்பட்ட 10, ஏப்பிறல் 2012 ஆந் திகதியிடப்பட்ட 672 ஆம் இலக்க முறிக்குரிய கொடுப்பனவுகளை மஹமது ஜவுபார் மஹமது றமீஸ் மற்றும் மஹமது ஜவுபர் பசீல் (கடன்பட்டவர்கள்) என்பவர்கள் செலுத்த தவறியதால் மேற்குறித்த வங்கியால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தைக் கொண்டு மேற்குறிப்பிட்ட ஆதனங்களை அவ் ஆதனங்கள் உள்ள இடங்களில் 2014 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 28 ஆந் திகதி முறையே காலை 10.30 மணிக்கு மற்றும் காலை 10.45 மணிக்கு என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**மேலதிக விபரங்களுக்காக.**- 2014.02.22 ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானியிலும், 2014.02.10 ஆந் திகதிய "த ஐலண்ட்", "திவயின" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**சொத்திற்கு போகும் வழி.**- வரிமதிப்பீட்டு இல. 30, கர்பலா வீதி, அரசடி மணிக்கூட்டுக் கோபுரச் சந்தியிலிருந்து புதிய கல்முனை வீதியினூடாக காத்தான்குடி கடற்கரை வீதி வரை ஏறத்தாழ 3 1/2 கிலோமீற்றர் செல்லவும். இடது பக்கம் திரும்பி கடற்கரை வீதியில் 750 மீற்றர் தூரம் காத்தான்குடி மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை) வரை செல்லவும். வலது பக்கம் திரும்பி கர்பலா வீதியினூடாக ஏறத்தாள 175 மீற்றர் சென்றால் குிறத்த ஆதனத்தை வலது பக்கம் காணலாம்.

